# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 329 | 4 Pages | 1.7.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 329 | 4 பக்கங்கள் | 1.7.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |

## பாலஸ்தீன பகுதிக்குள் நுழைந்த இஸ்ரேல் டிரைவரின் காருக்கு தீவைப்பு.. உள்ளூர் மக்கள் ஆவேசம்



இஸ்ரேல், ஜூலை 1

இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்கு கரையில் இஸ்ரேல் ராணுவ வீரர்களுக்கும், ஆயுதமேந்திய பாலஸ்தீனர்களுக்கும் இடையே அவ்வப்போது மோதல் மற்றும் வன்முறை ஏற்படுகிறது. தற்போது, இஸ்ரேல் படைகளுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்குமிடையே போர் நடைபெற்று வரும் நிலையில் இந்த வன்முறை அதிகரித்துள்ளது. இஸ்ரேல் படைகள் சோதனை நடத்தும்போது அவர்களுக்கும் உள்ளூர் பாலஸ்தீனர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டு உயிர்ப்பலி அதிகரித்து வருகிறது.

இஸ்ரேல் படைகள் மற்றும் மேற்கு கரையில் குடியேறியவர்களால் குறைந்தபட்சம் 553 பாலஸ்தீனயர்கள் கொல்லப்பட்டதாக பாலஸ்தீனிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.இதேபோல் பாலஸ்தீனியர்களின் தாக்குதல்களில் குறைந்தது 15 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், இஸ்ரேலைச் சேர்ந்த டிரைவர் ஒருவர், ஜெருசலேம் மற்றும் ரமல்லா இடையே பாலஸ்தீன கட்டுப்பாட்டில் உள்ள குவாலந்தியா நகருக்குள் தவறுதலாக நுழைந்துள்ளார். இஸ்ரேல் பதிவெண் கொண்ட வாகனத்தைப் பார்த்ததும் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் அந்த காரை தீயிட்டு கொளுத்தி உள்ளனர். இது தொடர்பான வீடியோ வைரலாகி வருகிறது.

ஒரு வீடியோவில், இஸ்ரேலியரின் காரை பாலஸ்தீனர்கள் துரத்தி துரத்தி கற்களை வீசி தாக்குவதும், அடுத்த வீடியோவில் கார் தீப்பற்றி எரிவதும் பதிவாகி உள்ளது.

பாலஸ்தீனர்களின் தாக்குதலில் இருந்து இஸ்ரேல் டிரைவர் தப்பிச் செல்ல முயன்றபோது, ராணுவ சோதனைச்சாவடி அருகே சாலையின் மையப்பகுதியில் உள்ள கான்கிரீட் தடுப்பில் கார் மோதி விபத்துக்குள்ளானதாகவும், இதில் காயமடைந்த டிரைவர் ஜெருசலேமில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும் இஸ்ரேல் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

## வட கொரியாவில் கேபாப் இசையை கேட்ட வாலிபருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்



சியோல், ஜூலை 1

சர்வாதிகார ஆட்சி நடைபெறும் வட கொரியாவில் அரசுக்கு எதிராகவோ, அந்நாட்டின் தலைவர் கிம் ஜாங் உன்னுக்கு எதிராகவோ யாரும் எதுவும் பேச முடியாது. அந்த அளவுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மேற்கத்திய கலாச்சாரங்கள் கொண்ட பொழுதுபோக்கு, உடை உள்ளிட்ட விஷயங்களில் கட்டுப்பாடுகள் உள்ளன. இந்த கட்டுப்பாடுகளை மீறினால் கொடூர தண்டனைகளும் விதிக்கப்படுகின்றன. வட கொரியா மீது மனித உரிமை மீறல் தொடர்பாக தொடர்ந்து குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

இந்நிலையில், அரசின் கட்டுப்பாடுகளை மீறி, தென் கொரியாவின் கேபாப் இசையை கேட்டதற்காகவும், தென்கொரிய திரைப்படங்களை பார்த்ததற்காகவும் 22 வயது வாலிபர் ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

தெற்கு ஹவாங்கே மாகாணத்தைச் சேர்ந்த அந்த வாலிபர், 2022ம் ஆண்டு 70 தென் கொரியப் பாடல்களைக் கேட்டதாகவும், மூன்று திரைப்படங்களைப் பார்த்ததாகவும், அவற்றைப் பகிர்ந்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டது. இந்த வழக்கில் அவர் குற்றவாளி என உறுதி செய்யப்பட்டதையடுத்துஅவர்பொதுஇடத்தில்தூக்கிலிடப்பட்டதாக, வடகொரியமனிதஉரிமைகள்பற்றிதிகார்டியன்இதழ்வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவில் இருந்து வெளியேறிய 649 பேரின் கருத்துக்கள் திகார்டியன் வெளியிட்ட அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்கத்திய செல்வாக்கு மீதான வட கொரியாவின் ஒடுக்குமுறை குறித்து அவர்கள் கூறி உள்ளனர்.

அதில் ஒருவர், வட கொரியாவில் வாழ்வதை விட இறப்பதே மேல் என்று நினைத்ததாக கூறியிருக்கிறார். கொரிய நாடகங்களைப் பார்த்துவிட்டு, நாம் ஏன் இப்படி வாழ வேண்டும்? என்று பல இளைஞர்கள் ஆச்சரியப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# விஷ சாராய விவகாரத்தில் 24 மணி நேரத்தில் அரசு துரித நடவடிக்கை எடுத்தது: முதல்வர் ஸ்டாலின்



சென்னை, ஜூலை 1

விஷ சாராய விற்பனையை முற்றிலுமாக ஒழிக்கும் வகையில் மதுவிலக்கு சட்டத்திருத்த மசோதா சட்ட சபையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது. மதுவிலக்கு சட்டத்திருத்த மசோதாவை அமைச்சர் முத்துசாமி தாக்கல் செய்தார். இதைத்தொடர்ந்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

மக்களவை தேர்தலில் 40க்கு 40 வெற்றி என்ற பெருமிதத்துடன் சட்டசபைக்கு வந்துள்ளோம். பொய் பிரசாரங்களை முறியடித்து செய் கூலி, சேதாரம் இல்லாத வெற்றியை மக்கள் தி.மு.க. கூட்டணிக்கு வழங்கி உள்ளனர். 2026 சட்டசபை தேர்தலிலும் மகத்தான வெற்றியை நாங்கள் பெறுவோம். தி.மு.க. அரசின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையின் பேரில் இதனை துணிச்சலுடன் சொல்கிறேன்.

மக்கள் மனதில் யார் உள்ளார்கள், மக்கள் யாரை புறக்கணித்தார்கள் என்பதை இந்த வெற்றி உணர்த்தும். தேர்தல் தோல்வியின் தாக்கத்தால் விஷ சாராய விவகாரத்தை எதிர்க் கட்சிகள் தொடர்ந்து கையில் எடுத்து வருகின்றன. கள்ளக்குறிச்சி விஷ சாராய விவகாரத்தில் 24 மணி நேரத்தில் அரசு துரித நடவடிக்கை எடுத்தது. விஷ சாராயம் மட்டுமில்லாமல், போதைப்பொருள் நடமாட்டத்தையும் கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கள்ளக்குறிச்சி விஷ சாராய விவகாரத்தில் தொடர்புடைய அதிகாரிகள் மீது பணியிடை நீக்கம் உள்ளிட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தனை நடவடிக்கைகளை எடுத்த பிறகும் நடவடிக்கை இல்லைஎனகூறுவதுபிரச்சினையை திசை திருப்பும் நாடகம். எதையோ மறைக்க அ.தி.மு.க. சிபிஐ விசாரணை கேட்கிறது. சாத்தான்குளம் சம்பவத்தை அ.தி.மு.க. அரசு மூடி மறைக்க முயன்றதால்தான், அப்போது சிபிஐ விசாரணை கோரினோம்.

ஒரு மனிதர் இறந்தாலும் அது மாபெரும் இழப்புதான்; இந்த அரசு எதையும் மறைக்கவில்லை. குறுகிய காலத்தில் குற்றவாளிகளை கைது செய்துள்ளோம்.

கோடநாடு கொலை வழக்கில் இதுவரை 268 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 8 செல்போன்கள் ஆய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது. வெளிநாட்டு அழைப்புகளும் இருப்பதால் இன்டர்போல் மூலம் விசாரிக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# ரூ.4730 கோடி மணல் கொள்ளை.. மொத்தமாய் சுருட்டிய ‘கம்பெனி’: துரைமுருகனை தூக்குங்க.. பாஜக ‘தலை’ ஆவேசம்



சென்னை, ஜூலை 1

தமிழகத்தில் மணல் கடத்தல் விவகாரத்தில் 4,730 கோடி ரூபாய் மோசடி செய்துள்ளதாக அமலாக்கத்துறை விசாரணையில் தெரியவந்துள்ளது. இது குறித்து தமிழக டிஜிபிக்கு அமலாக்கத் துறை கடிதமும் எழுதியுள்ள நிலையில் அமைச்சர் துரைமுருகனை கைது செய்ய வேண்டுமென பாஜக மூத்த தலைவர் எச்.ராஜா கூறியுள்ளார்.

தமிழகத்தில் சுமார் ரூ 4,730 கோடி அளவுக்கு மணல் கொள்ளை நடந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இது குறித்து ஏற்கெனவே அமலாக்கத் துறை விசாரணை நடத்தி வருகிறது. மணல் குவாரிகளில் ஏற்கெனவே மத்திய புலனாய்வுத் துறை அமைப்புகள் சோதனை நடத்தி பல ஆவணங்களை சேகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் அமலாக்கத்துறை தமிழக டிஜிபிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளது. அதில் தமிழகத்தில் மணல் கொள்ளை நடந்துள்ளதாகவும், சுமார் 4700 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடந்திருப்பதாக கூறப்பட்டுள்ளது பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பான கடிதத்தில்,”பணப்பரிவர்த்தனை முறைகேடு தடுப்புச் சட்டம் பிரிவின் படி இந்த கடிதத்தை அமலாக்கத் துறை அனுப்பியுள்ளது. அதில் கடந்த 9 மாதங்களாக அமலாக்கத் துறை நடத்திய விசாரணையில் தமிழகத்தில் 2023 2024 ஆம் காலகட்டத்தில் சட்டவிரோதமாக 23.64 லட்சம் யூனிட் மணல் கொள்ளை நடந்துள்ளது. குத்தகைக்கு விடப்பட்ட மணல் படுகைகளில் மணல் அள்ளும் இயந்திரங்கள் மூலமாக தனியார் ஒப்பந்ததாரர்கள் எப்படி மணலை சட்டவிரோதமாக எடுத்தனர் என்பது குறித்து விரிவான தகவல்களையும் அமலாக்கத் துறை தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. மேலும் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதியை விட 10 முதல் 30 மடங்கு அதிகமாக மணல் எடுத்துள்ளனர்.

ஒரே இடத்தில் 4.9 ஹெக்டேரில் மணல் எடுக்கப்பட்டுள்ளதாக அமலாக்கத் துறை குற்றம்சாட்டியுள்ளது. 5 மாவட்டங்களில் 190 ஹெக்டேரில் பரப்பளவில் 28 இடங்களில் மணல் எடுக்க குத்தகைதாரர்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் சட்டவிரோதமாக 987 ஹெக்டேர் பரப்பளவுக்கு மணல் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இந்த முறைகேடுகள் ஆளில்லா விமானங்களால் எடுக்கப்பட்ட படங்கள் மூலம் தெரியவந்தது.

மாநில அரசின் நீர்வளத் துறை அனுமதி அளித்துள்ள குவாரிகளில் மணல் கொள்ளை நடந்துள்ளது. இது குறித்து அமலாக்கத் துறை அதிகாரிகள் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வந்த நிலையில் குவாரிகளில் மணல் எடுக்க அனுமதி பெற்ற ஒப்பந்ததாரர்கள் புதுக்கோட்டை ராமச்சந்திரன், திண்டுக்கல் ரத்தினம் உள்ளிட்டோர் வீடுகள், அலுவலகங்களில் நடத்திய சோதனையில் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த ஆவணங்களை வைத்து உத்தரபிரதேச மாநிலம், கான்பூரில் உள்ள ஐஐடி நிபுணர்கள் உதவியுடன் அறிவியல் பூர்வமாக எந்த ஆழத்திற்கு எவ்வளவு மணல் அள்ளப்பட்டது என ஆய்வு நடத்தப்பட்டது. தொடர் விசாரணையில் அரசு 490 ஏக்கர் அளவுக்கு மணல் அள்ள அனுமதி அளித்துள்ள நிலையில் 2,450 ஏக்கர் அளவுக்கு மணல் அள்ளப்பட்டுள்ளது என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

இதற்காக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோர் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்நிலையில் மணல் கொள்ளை குறித்து தமிழக டிஜிபிக்கு அமலாக்கத் துறை கடிதமும் எழுதியுள்ள நிலையில் அமைச்சர் துரைமுருகனை கைது செய்ய வேண்டுமென பாஜக மூத்த தலைவர் எச்.ராஜா கூறியுள்ளார்.

இதுதொடர்பாக தனது சமூக ஊடக பக்கத்தில் செய்திகளை பகிர்ந்துள்ள அவர்,”தமிழக காவல் துறை என்ன செய்கிறது. ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காது. பாஜக போராட்டத்தை தடுப்பது பாஜக நினர் மீது வழக்கு தொடர்வது, திமுகவின் boy scout போல் செயல்படுவது இது மட்டுமே அவர்கள் பணி. டிஜிபி முழு விளக்கம் தர வேண்டும். குற்றசாட்டில் உண்மையிருப்பின்துறைமுருகனை உடனடியாக கைது செய்ய வேண்டும். இந்த திமுக ஊழல் ஆட்சியிலிருந்து தமிழகத்திற்கு விரைவில் விடுதலை தேவை” என பகிர்ந்துள்ளார்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக கள்ளிக்குடியில் நடைபெற்ற அழகேந்திரன் ஆணவ படுகொலையை கண்டித்து தமிழ் புலிகள் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தில் தலித் விடுதலை இயக்க மாநில தலைவர் தலித் கருப்பையா சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று பேசினார். அருகில் மதுரை மாவட்ட அமைப்பு பொதுச் செயலாளர் ஹரிஸ் அரசு உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# ஒரே ஒரு மாணவி படித்து வந்த அரசுப்பள்ளி தற்காலிக மூடல்

ராமநாதபுரம், ஜூலை 1

ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தாலுகா கடம்பூரில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி செயல்பட்டு வந்தது. இந்த பள்ளியில் அப்பகுதியை சேர்ந்த மாணவ, மாணவிகள் படித்து வந்தனர். ஆனால் நாளடைவில் மாணவர் சேர்க்கை விகிதம் குறைந்து கொண்டே வந்தது. ஒரு மாணவி மட்டுமே படித்து வந்தார்.

இந்நிலையில் போதிய மாணவர்கள் சேர்க்கை இல்லாததால் அந்த மாணவியும் அருகில் உள்ள குருந்தங்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சேர்க்கப்பட்டார். ஏற்கனவே இந்த பள்ளியில் பணியாற்றி வந்த இடைநிலை ஆசிரியர் பாக்கியராஜ், முள்ளிமுனை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாற்றுப் பணி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். அதேபோல் இப்பள்ளியில் பணியாற்றிய தலைமை ஆசிரியர் அமலோற்பவ தாஸ் அருகிலுள்ளகவலைவென்றான் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு தலைமை ஆசிரியராக மாற்றம் செய்யப்பட்டார்.

இதனால் கடம்பூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தற்காலிகமாக மூடப்பட்டது. இந்த கல்வியாண்டின் முதல் பருவத்திற்குள் இப்பள்ளியில் குறைந்தபட்சம் 5 மாணவ மாணவிகளை சேர்க்க நடவடிக்கை எடுத்து வருவதாக கூறப்படுகிறது. அவ்வாறு மாணவர்கள் சேரும்பட்சத்தில் இப்பள்ளி மீண்டும் செயல்பட தொடங்கும் என கல்வித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வயிற்றில் இருக்கும் சிசுவின் பாலினத்தை கண்டறிந்த கும்பல் கைது

தர்மபுரி, ஜூலை 1

தர்மபுரி மாவட்டத்தில் கர்ப்பிணி பெண்களின் வயிற்றில் இருக்கும் சிசுவின் பாலினத்தை கண்டறிந்து, கருக்கலைப்பு செய்யும் கும்பல் இயங்கி வருவதாக சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது.



இந்த தகவலின் அடிப்படையில் ஊரக நலத்துறை இணை இயக்குனர் மருத்துவர் சாந்தி தலைமையிலான அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணையில், கள்ளக்குறிச்சியை சேர்ந்த முருகேசன் என்பவர், ஸ்கேன் இயந்திரம் மூலம், கர்ப்பிணி பெண்களின் கருவில் இருக்கும் சிசுவின் பாலினத்தை கண்டறிந்து சொல்லி வந்ததை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதற்காக ஒரு நபரிடம் ரூ.13 ஆயிரம் வீதம் அவர் பணம் பெற்றுள்ளார். இது தொடர்பாக முருகேசன், இடைத்தரகர் லலிதா, நடராஜன், சின்ராஜ் உள்ளிட்ட நான்கு பேரை பிடித்து பென்னாகரம் போலீசாரிடம் அதிகாரிகள் ஒப்படைத்தனர்.

அவர்கள் நான்கு பேரையும் கைது செய்த போலீசார், அவர்களிடம் இருந்த ஸ்கேன் இயந்திரம், பணம், சொகுசு கார், இரு சக்கர வாகனம் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட முருகேசன், ஏற்கனவே சட்டவிரோதமாக கருக்கலைப்பு செய்ததாக கள்ளக்குறிச்சியில் கைதானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருமணம் செய்து வைக்காததால் மூதாட்டியை அடித்துக்கொன்ற இளம்பெண்



கடலூர், ஜூலை 1

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அடுத்த பேரளையூர் கிராமத்தை சேர்ந்தவர் கலியமூர்த்தி மனைவி தனலட்சுமி (வயது 70). இவரது மகன் பன்னீர்செல்வம். இவருடைய மனைவி புஷ்பவள்ளி. இந்த தம்பதிக்கு சிவக்குமார் என்ற மகனும், சிவரஞ்சனி, சிவசத்யா (25) என்ற 2 மகள்களும் உள்ளனர்.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு பன்னீர்செல்வமும், 10 ஆண்களுக்கு முன்பு சிவக்குமாரும் இறந்துவிட்டனர். சிவரஞ்சனி திருமணமாகி கருவேப்பிலங்குறிச்சியில் வசித்து வருகிறார். சிவசத்யா மட்டும் திருமணம் ஆகாத நிலையில், தனது தாய் புஷ்பவள்ளி மற்றும் பாட்டி தனலட்சுமியுடன் வசித்து வந்தார். தனது சகோதரர் சிவக்குமார் உயிரிழந்த நாளில் இருந்து சிவசத்யா சற்று மனநலம் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், சிவசத்யா கடந்த சில நாட்களாக தனது பாட்டி தனலட்சுமியிடம், எனக்கு ஏன் இன்னும் திருமணம் செய்து வைக்கவில்லை என்று கூறி தகராறில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படுகிறது. இந்த சூழலில் நேற்று முன்தினம் மாலையும், சிவசத்யா தனது பாட்டியுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார். அப்போது இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தில் ஆத்திரமடைந்த சிவசத்யா பாட்டி என்றுகூட பாராமல் அருகில் கிடந்த இருப்புக்கம்பியைஎடுத்து தனலட்சுமியை சரமாரியாக தாக்கினார்.

இதில் ரத்த வெள்ளத்தில் சுருண்டு விழுந்த தனலட்சுமி, சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார். இதையடுத்து சிவசத்யா நடந்த சம்பவம் குறித்து பக்கத்து வீட்டில் இருந்த தனது தாயிடம் கூறினார். இதைகேட்டு அதிர்ச்சி அடைந்து வீட்டிற்கு வந்த புஷ்பவள்ளி, தனலட்சுமியின் உடலை பார்த்து கதறி அழுதார்.

இதனிடையே தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த விருத்தாசலம் இன்ஸ்பெக்டர் முருகேசன், கருவேப்பிலங்குறிச்சி சப்இன்ஸ்பெக்டர் சிவராமன் மற்றும் போலீசார், தனலட்சுமியின் உடலை பார்வையிட்டு, அக்கம் பக்கத்தினரிடம் விசாரணை நடத்தினர். தொடர்ந்து அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக விருத்தாசலம் அரசு ஆஸ்பத்திரிக்கு போலீசார் அனுப்பி வைத்தனர்.

இதனிடையே சம்பவம் தொடர்பாக சிவசத்யாவிடம் போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது, அவர் நான் தான் பாட்டியை கொன்றேன். ஆனால், என் அருகில் போலீசார் யாராவது வந்தால் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டியுள்ளார். இதில் அதிர்ச்சி அடைந்த போலீசார் அவரை கைது செய்ய முடியாமல்,

வேறு வழியின்றி வீட்டிலேயே காவலில் வைத்துள்ளனர். மேலும் இது தொடர்பாக கருவேப்பிலங்குறிச்சி போலீசார் வழக்குப்பதிவு செய்து, விசாரணைநடத்தி வருகின்றனர்.

திருமணம் செய்து வைக்காத ஆத்திரத்தில் பேத்தியே, பாட்டியை அடித்துக்கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# டி.என்.பி.எஸ்.சி. குரூப்4 தேர்வு இறுதி விடைத்தாள் நகலை வெளியிட மதுரை ஐகோர்ட்டு கிளை உத்தரவு

மதுரை, ஜூலை 1

திண்டுக்கல் மாவட்டம் பழனியைச் சேர்ந்த முத்துலட்சுமி, திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முத்துசெல்வம் உள்ளிட்டோர் மதுரை ஐகோர்ட்டு கிளையில் தாக்கல் செய்த மனுவில், தமிழகத்தில் காலியாக உள்ள 6,244 பணியிடங்களை நிரப்புவதற்கான ஒருங்கிணைந்த டி.என்.பி.எஸ்.சி. குரூப்4 தேர்வுக்கான அறிவிப்பு கடந்த ஜனவரி 30ந்தேதி வெளியிட்டு, இதற்கான எழுத்து தேர்வு ஜூன் 9ந்தேதி நடந்த நிலையில், பணி நியமன அறிவிப்பிற்கு முன்பாக தேர்வர்களுக்கு இறுதி விடைத்தாள் மற்றும் ஓ.எம்.ஆர். தாள் நகலை வெளியிட உத்தரவிட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த மனு நீதிபதி மஞ்சுளா முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி, அண்மையில் நடந்து முடிந்த டி.என்.பி.எஸ்.சி. குரூப்4 தேர்வுக்கான இறுதி விடைத்தாள் மற்றும் ஓ.எம்.ஆர். தாள் நகலை, பணி நியமன பட்டியல் வெளியிடுவதற்கு முன்பாக வெளியிட வேண்டும் என உத்தரவிட்டார்.

# தொழிற்பயிற்சி நிலையங்களில் நேரடி சேர்க்கை...மாணவர்கள் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்: தமிழ்நாடு அரசு

சென்னை, ஜூலை 1

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,



தமிழகத்தில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் 102 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 305 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 20242025ம் கல்வியாண்டிற்கானபயிற்சியாளர்கள் சேர்க்கை செய்வதற்கான இணைய தள கலந்தாய்வு தற்போது 28.06.2024உடன்நிறைவு செய்யப்பட்டது.

இந்நிலையில் மாணவர்களின் நலன் கருதி தற்போது 8ம் மற்றும் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கானநேரடி சேர்க்கை 01.07.2024 முதல் 15.7.2024 வரை இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளது.

மாணவர்கள்தாம்விரும்பும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கல்விச்சான்றிதழ்களுடன்நேரில்சென்று தாம் விரும்பும் தொழிற்பிரிவை தெரிவு செய்து தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரலாம் . சென்ற ஆண்டுகளில் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களில் 80% பேர் பல முன்னணி தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பை பெற்றுள்ளனர்.அரசுத்தொழிற்பயிற்சி நிலையங்களில்இன்றைய தொழிற்சாலைகளுக்கு தேவையான தொழில் 4.0 உள்ளிட்ட பல நவீன தொழிற்பிரிவுகளில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அறிய வாய்ப்பை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். என தெரிவிக்கப்பட்டுள்ளது

# மது வாங்க கொடுத்த பணத்தை செலவு செய்த நண்பனுக்கு தலையில் வெட்டு

கடலூர், ஜூலை 1

கடலூர் மாவட்டம் பண்ருட்டி திருவதிகை எம்.ஜி.ஆர். நகரை சேர்ந்தவர் சக்திவேல் மகன் விநாயகம் என்ற விநாயகமூர்த்தி (வயது 25). இவரும், திருவதிகை ஆயில்மில் தெருவை சேர்ந்த பஞ்சநாதன் மகன் பன்னீர் என்ற பன்னீர்செல்வம் (34) என்பவரும் நண்பர்கள் ஆவர்.

சம்பவத்தன்று பன்னீர்செல்வம், விநாயகமூர்த்தியிடம் ரூ.300யை கொடுத்து மது பாட்டில் வாங்கி வருமாறு கூறியுள்ளார். ஆனால் விநாயகமூர்த்தி மதுபாட்டில் வாங்கி வராமல் அந்த பணத்தை செலவு செய்துவிட்டதாக தெரிகிறது. இதுகுறித்து பன்னீர்செல்வம், விநாயகமூர்த்தியிடம் கேட்டபோது, இருவருக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த பன்னீர்செல்வம் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து விநாயகமூர்த்தியின் தலையில் வெட்டியதாக கூறப்படுகிறது. இதில் காயமடைந்த அவர் கடலூர் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்த புகாரின்பேரில் பன்னீர்செல்வம் மீது போலீசார் கொலை முயற்சி வழக்குப்பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மாணவிக்கு பாலியல் தொல்லை: அரசு பள்ளி தலைமை ஆசிரியர் மீது பாய்ந்தது நடவடிக்கை

கோவை ஜூலை 1

கோவையை அடுத்த தொண்டாமுத்தூர் வட்டாரத்திற்கு உட்பட்ட பகுதியில் அரசு மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு 800க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர். 30க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வகுப்பு எடுக்கிறார்கள். கடந்த கல்வியாண்டில் இந்த பள்ளியில் 8ம் வகுப்பு படித்த 13 வயது மாணவிக்கு அங்கு பணியாற்றிய உடற்கல்வி ஆசிரியர் ஆனந்தகுமார் என்பவர் பாலியல் தொல்லை கொடுத்ததாக தெரிகிறது.

தனக்கு நேர்ந்த பாலியல் தொல்லை குறித்து பள்ளி தலைமை ஆசிரியை ஜீவா ஹட்சன் உள்பட சில ஆசிரியர்களிடம்அந்தமாணவி புகார் அளித்து இருந்ததாக கூறப்படுகிறது. எனினும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே இந்த சம்பவம் குறித்து மாணவி அனைத்து மகளிர் போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் உடற்கல்வி ஆசிரியர் ஆனந்தகுமாரை போக்சோ சட்டப்பிரிவின் கீழ் கைது செய்தனர்.

தொடர்ந்து இந்த வழக்கில் மாணவியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் சில ஆசிரியர்கள் பெயரையும் போலீசார் சேர்த்தனர்.

மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த புகாரில் கைதான ஆசிரியர் ஆனந்தகுமார் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். தொடர்ந்து அந்த பள்ளியில் பணியாற்றிய தலைமை ஆசிரியை ஜீவா ஹட்சன் மத்வராயபுரம் அரசு பள்ளிக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார். இதுபோன்று 10 ஆசிரியர்களும் கூண்டோடு இட மாற்றம் செய்யப்பட்டனர். இந்தநிலையில் மத்வராயபுரம் அரசு பள்ளி தலைமை ஆசிரியை ஜீவா ஹட்சன் நாளை(ஞாயிற்றுக்கிழமை) ஓய்வு பெற இருந்தார். இந்தநிலையில் நேற்று அவரை பணியிடை நீக்கம் செய்து சென்னையில் இருந்து பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டு உள்ளது. இதற்கான உத்தரவு நகல் தலைமை ஆசிரியைக்கு வழங்கப்பட்டது.

# ஓடும் ரெயிலில் இருந்து தவறி விழுந்து என்ஜினீயரிங் மாணவர் உயிரிழப்பு

சேலம், ஜூன் 30

சேலம் அருகே உள்ள டேனீஸ்பேட்டைலோக்கூர் ரெயில் நிலையங்களுக்கு இடையே நேற்று முன்தினம் நள்ளிரவில் 20 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர் ரெயில் தண்டவாளத்தில் இறந்து கிடந்தார். இதுகுறித்து தகவல் கிடைத்ததும் சேலம் ரெயில்வே போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் கோபண்ணா மற்றும் போலீசார் விரைந்து சென்றனர். இதையடுத்து அந்த வாலிபரின் உடலை போலீசார் மீட்டு பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இதையடுத்து இறந்த வாலிபர்யார்?, எந்தஊரை சேர்ந்தவர்? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தினர்.

இதில் இறந்தவர் திருப்பத்தூர் மாவட்டம் பத்தனவாடி கந்திலியை சேர்ந்த பிரகாசம் மகன் சக்திமகி (வயது 20) என்பது தெரியவந்தது. பிரகாசம் திருப்பத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியில் காசாளராக பணியாற்றி வருவதும் தெரியவந்தது.

மேலும் மாணவர் சக்திமகி ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் உள்ள என்ஜினீயரிங் கல்லூரியில் 3ம் ஆண்டு படித்து வந்ததும், நேற்று முன்தினம் மாலை ஈரோட்டில் இருந்து ஜோலார்பேட்டை செல்ல கோவை சென்னை எக்ஸ்பிரசில் (வண்டி எண். 12676) முன்பதிவில்லா பெட்டியில் பயணம் செய்துள்ளார்.

இதில் கூட்டம் அதிகமாக இருந்ததால் படிக்கட்டு அருகே பயணம் செய்த சக்திமகி ரெயிலில் இருந்து தவறி விழுந்து இறந்து இருப்பதும் முதல் கட்ட விசாரணையில் தெரியவந்தது. மேலும் இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஓடும் பஸ்சில் தானாக கழன்ற சக்கரம்.. டிரைவரின் சாமர்த்தியத்தால் பெரும் விபத்து தவிர்ப்பு

கன்னியாகுமரி, ஜூலை 1

கன்னியாகுமரி மாவட்டம் பனச்சமூட்டில் இருந்து மார்த்தாண்டம் நோக்கி நேற்று காலை 8 மணிக்கு மகளிருக்கு கட்டணம் இல்லாத ஒரு அரசு பஸ் புறப்பட்டது. அந்த பஸ்சில் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவமாணவிகள், தனியார் மற்றும் அரசு நிறுவனங்களில் பணியாற்றும் பெண்கள் உள்பட ஏராளமானோர் பயணம் செய்தனர். கூட்டம் அதிகமாக இருந்ததால் படிக்கட்டு அருகிலும் பெண்கள் நின்று கொண்டிருந்தனர்.

அந்த பஸ் குழித்துறை தாலுகா அலுவலக சந்திப்பை கடந்து வந்த போது அதன் பின்பக்க சக்கரத்தில் இருந்து வித்தியாசமான சத்தம் கேட்டது. பின்னர் அந்த பஸ் குழித்துறை தபால் நிலைய சந்திப்பில் நின்றுவிட்டு மீண்டும் புறப்பட்ட போது அந்த பஸ் தடுமாறியபடி சென்றது. இதனை கவனித்த டிரைவர் சாலையோரம் பஸ்சை நிறுத்தி சக்கரங்களை ஆய்வு செய்தார். அப்போது பின்பக்க சக்கரத்தின் நட்டு மற்றும் போல்டுகள்உடைந்து சக்கரம் பாதி கழன்ற நிலையில் இருந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.




டிரைவர் சரியான நேரத்தில் சாமர்த்தியமாக பஸ்சை நிறுத்தியதால் அதிலிருந்த பயணிகள் அனைவரும் உயிர் தப்பினர். தொடர்ந்து பயணிகள் இறக்கப்பட்டு மாற்று பஸ்சில் அனுப்பி வைக்கப்பட்டனர்.

மார்த்தாண்டம், குழித்துறை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இயங்கும் அரசு பஸ்கள் பழுதடைந்து நடுவழியில் நிற்பது தொடர்கதையாக உள்ளது. இரவு நேரங்களில் சில பஸ்களில் முகப்பு விளக்குகள் எரிவதில்லை.

இதனால் இந்த பஸ்களில் பயணிகள் அச்சத்துடனே பயணம் செய்கிறார்கள். எனவே பயணிகளின் நலன்கருதி தரமான பஸ்களை இயக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஊருக்குள் புகுந்து மக்களின் நிம்மதியை கெடுத்த காட்டு யானைகள் ; விரட்டியடித்த வனத்துறை

கூடலூர், ஜூலை 1



கூடலூர் பகுதியில் காட்டு யானைகளால் பிரச்சனை ஏற்படுவதால் பொதுமக்கள் மற்றும் வனத்துறையினர் இடையே பனிப்போர் நிலவுகிறது. கூடலூர் வன அலுவலர்அலுவலகம் உள்ள மாக்கமூலா பகுதியில் 3 காட்டு யானைகள் முகாமிட்டு இருந்தது. இதனால் சுற்று வட்டார மக்கள் அச்சமடைந்தனர். தொடர்ந்து காட்டு யானைகளை விரட்ட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இரவு முழுவதும் காட்டு யானைகள் அப்பகுதியில் முகாமிட்டு இருந்தது. இதைத் தொடர்ந்து வனத்துறையினர் விரைந்து வந்து பட்டாசுகளை வெடித்து காட்டு யானைகளை கூடலூர் மைசூரு தேசிய நெடுஞ்சாலையை கடந்து அள்ளூர் வயல் வழியாக முதுமலை வனத்துக்குள்விரட்டியடித்தனர். இதனால் அப்பகுதி மக்கள் நிம்மதி அடைந்தனர்.

இதேபோல் கூடலூர் அருகே தேவர் சோலை பேரூராட்சிக்குட்பட்ட கல்லீங்கரை பகுதியில் 5 காட்டு யானைகள் முகாமிட்டு அப்பகுதியில் உள்ளவிவசாயபயிர்களை சேதப்படுத்தி வந்தது.

மேலும் தினமும் காலையில் மற்றொரு காட்டு யானை மெயின் சாலை வழியாக நடந்து 4ம் மைல் உள்ளிட்ட இடங்களுக்கு வருகிறது. இதனால் பொதுமக்கள், வாகன ஓட்டிகள் அச்சத்துடன் பயணம் செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதனால் காட்டு யானைகளை விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி இன்று காலையில் போராட்டம்நடத்தமுயன்றனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. தகவல் அறிந்த வனத்துறையினர் விரைந்து வந்து பொதுமக்கள் உதவியுடன் பட்டாசுகளை வெடித்து 5 காட்டு யானைகளை வனத்துக்குள் விரட்டியடித்தனர்.

# ஓடும் ரெயிலில் கல்லூரி மாணவிக்கு பாலியல் தொல்லை: வாலிபர் கைது



சென்னை, ஜூலை 3

கேரளாவை சேர்ந்த இளம்பெண் ஒருவர், சென்னையில் சட்டக்கல்லூரி படித்து வருகிறார். இவர், நேற்று அதிகாலை மங்களூரு மெயில் எக்ஸ்பிரஸ் ரெயிலில் சென்னை நோக்கி வந்தபோது, வாலிபர் ஒருவர் அவருக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது.

மேலும் அந்த வாலிபர், பாலியல் தொல்லை கொடுத்து விட்டு அருகில் உள்ள பெட்டிக்கு ஓடமுயற்சித்தபோது, மாணவி அவரை சக பயணி ஒருவரின் உதவியுடன் விரட்டிச் சென்று மடக்கி பிடித்தார். ரெயில் பெட்டியில் இருந்த பெண் டிக்கெட் பரிசோதகர்களின் ஆலோசனையின்படி, அந்த நபரை சென்னை சென்டிரலுக்கு அழைத்து வந்தனர்.

வாலிபரிடம் நடத்திய விசாரணையில், அவரது பெயர் சஜன் (வயது 28) என்பதும், மேற்கு வங்காளத்தை சேர்ந்த இவர், தனது மனைவி மற்றும் 2 குழந்தைகளுடன் சட்டக்கல்லூரி மாணவி பயணித்த பெட்டிக்கு அருகில் உள்ள மற்றொரு பெட்டியில் பயணம் செய்ததும் தெரியவந்தது.

பாலியல் தொல்லை தொடர்பாக சஜன் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் கோர்ட்டு உத்தரவின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டார்.

# புகைப்படத்தை ஆபாசமாக சித்தரித்து வாலிபரிடம் பணம் பறித்த மர்ம நபர்

சென்னை, ஜூலை 1

சென்னை கீழ்ப்பாக்கம் பகுதியை சேர்ந்தவர் ராகேஷ். இவர் அம்பத்தூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறார். சமீபத்தில், இவரது 'வாட்ஸ் அப்'பில் புகைப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகள் வெளியாகின. அதில், ராகேஷ் இளம்பெண் ஒருவருடன் நெருக்கமாக இருப்பது போன்று, ஆபாசமாக சித்தரிக்கப்பட்டிருந்தது.

இதை பார்த்து ராகேஷ் அதிர்ச்சி அடைந்தார். சிறிது நேரத்தில் அவரது 'வாட்ஸ் அப்' எண்ணில் மர்ம நபர் ஒருவர் பேசினார். அந்த மர்ம நபர், ராகேஷின் ஆபாச படங்களை சமூகவலைதளங்களில் வெளியிட்டுவிடுவதாகவும், அவ்வாறு வெளியிடாமல் இருக்க ரூ.1.20 லட்சம் வேண்டும் என்றும் கேட்டார்.

இதனால் பயந்துபோன ராகேஷ், குறிப்பிட்ட நபரின் வங்கி கணக்கிற்கு, ரூ.1.20 லட்சத்தை அனுப்பி வைத்தார்.

பின்னர் இதுகுறித்து போலீசில் புகார் கொடுத்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து, ராகேஷிடம் பணம் பறித்த மோசடி நபரைதேடிவருகிறார்கள்.

# கள்ளக்காதல் விவகாரம்: கடிதம் எழுதிவைத்து தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்ட பெண்

பெரம்பூர், ஜூலை 1

சென்னை பழைய வண்ணாரப்பேட்டை சஞ்சீவிராயன் கோவில் தெருவைச்சேர்ந்தவர்சரவணன் (42). பெயிண்டரான இவர் வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு தற்போது பூந்தமல்லி அடுத்த நசரத்பேட்டையில் பெயிண்டராக வேலை செய்து வருகிறார். இவரது மனைவி விஜயசாந்தி (41). இவர், வண்ணாரப்பேட்டை சிமெண்டரி சாலையில் உள்ள பிரபல துணிக்கடையில் வேலை செய்து வந்தார். இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர்.

சரவணன் வெளிநாட்டில்வேலைசெய்தபோது, சம்பளத்தை மணலி புதுநகரில் உள்ள தனது தங்கையின் கணவரான மற்றொரு சரவணன் (40) என்பவருக்கு அனுப்பி வைத்தார். அவர் மெக்கானிக் வேலை செய்து வருகிறார். அந்த பணத்தை விஜயசாந்தி வீட்டில் கொடுக்க அடிக்கடி சென்று வந்ததால் இருவருக்கும் கள்ளக்காதல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

அதன்பிறகு வெளிநாட்டில் இருந்து சென்னைக்கு திரும்பி வந்த பெயிண்டர் சரவணன், மனைவியின் கள்ளக்காதல் விவகாரம் அறிந்து அதிர்ச்சி அடைந்தார். மனைவியை கண்டித்ததோடு அடித்து உதைத்ததாக கூறப்படுகிறது. மேலும் தன்னுடன் கள்ளக்காதலை தொடரும்படி மெக்கானிக் சரவணனும் விஜயசாந்தியை வற்புறுத்தியதாக தெரிகிறது.

இதனால் விரக்தி அடைந்த விஜயசாந்தி நேற்று முன்தினம் வீட்டின் படுக்கை அறையில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுபற்றி தண்டையார்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விஜயசாந்தி உடலை பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

விஜயசாந்தியின் வீட்டில் போலீசார் சோதனை செய்தபோது கடிதம் ஒன்று சிக்கியது. அதில் அவர், "என் சாவுக்கு என் கணவர் சரவணன் மற்றும் என்னுடன் கள்ளக்காதலில் ஈடுபட்ட உறவினரான சரவணன் ஆகியோர் தான் காரணம்" என எழுதி இருந்ததாக போலீசார் தெரிவித்தனர்.

இதையடுத்து போலீசார், விஜயசாந்தியின் கணவரான பெயிண்டர் சரவணன் மற்றும் அவரது உறவுக்காரரான மெக்கானிக் சரவணன் ஆகிய 2 பேரையும் கைது செய்தனர். அவர்கள் மீது தற்கொலைக்கு தூண்டியதாக வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# தாயை அரிவாளால் வெட்டிக்கொன்ற மகன்: ஈரோடு அருகே அதிர்ச்சி

ஈரோடு, ஜூலை 1

ஈரோடு மாவட்டம் சென்னிமலையைச் சேர்ந்தவர் துரைசாமி. விவசாயியான இவர் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். இவருடைய மனைவி பாப்பாத்தி (வயது 75). இவர்களுடைய மகன் பழனிசாமி (46). இவருடைய மனைவி சாவித்ரி. இவர்களுக்கு 18 வயதில் மகன் உள்ளார். கருத்து வேறுபாடு காரணமாக 15 ஆண்டுகளாக பழனிசாமியும், சாவித்ரியும் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர்.

பழனிசாமிக்கு குடிப்பழக்கம் இருப்பதால் வேலைக்கு செல்லாமல் குடித்துவிட்டு தனது தாய் பாப்பாத்தியிடம் அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வந்ததாக தெரிகிறது. சமீபத்தில் தங்களுக்கு சொந்தமான 1½ ஏக்கர் விவசாய நிலத்தை பாப்பாத்தியும், பழனிசாமியும் விற்பனை செய்ததாககூறப்படுகிறது. அதற்காக முன்பணமாக ரூ.1 லட்சம் வாங்கி உள்ளனர். மீதி பணம் இன்னும் வாங்கவில்லை என கூறப்படுகிறது.

இந்த நிலையில், நேற்று மாலையில் பழனிசாமி தனது தாய் பாப்பாத்தியிடம் விவசாய நிலம் விற்ற மீதி பணத்தை வாங்கி தன்னிடம் தரும்படி கேட்டுள்ளார். இதனால் அவர்களுக்கு இடையே வாய் தகராறு ஏற்பட்டுள்ளது. தகராறு முற்றியதில் பழனிசாமி ஆத்திரம் அடைந்து வீட்டில் இருந்த அரிவாளை எடுத்து தனது தாய் என்றும் பாராமல் பாப்பாத்தியை சரமாரியாக வெட்டினார். இதில் ரத்த வெள்ளத்தில் பாப்பாத்தி சரிந்து விழுந்து பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்த தகவல் கிடைத்ததும் சென்னிமலை போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பாப்பாத்தியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பெருந்துறை அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து தாயை கொன்ற பழனிசாமியை கைது செய்தனர். மகனே தாயை கொலை செய்த சம்பவம் ஈரோடு அருகே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சி.எஸ்.ஐ.வேலூர் பேராயரிடம் வாழ்த்து பெற்ற விழுப்புரம் ஜே.ஆர்.சி மாவட்ட கன்வீனர் ம.பாபு செல்வதுரை



விழுப்புரம், ஜூலை 1

முட்டத்தூர், ஒய்க்காப் மேனிலைப்பள்ளி நிகழ்வில். பேராயப் பள்ளிகளின் மேலாளரும், சி.எஸ்.ஐ வேலூர் பேராயர் பேரருட்பணி.

அறிவர். H. ஷர்மா நித்தியானந்தம் பள்ளியின் பட்டதாரி ஆசிரியரும், விழுப்புரம்ஜே.ஆர்.சிமாவட்டக் கன்வீனர் முனைவர். ம. பாபு செல்வதுரை. பள்ளிக் கல்வித் துறையில் ஜே.ஆர்.சி அமைப்பின் நீண்ட கால சேவை விருது Long Service Award பெற்றமைக்கு வாழ்த்து பெற்றார். அவ்வமையம் ஆயர்கள், பள்ளியின் தாளாளர் முனைவர். ஐ.ஸ்டேன்லி ஜோன்ஸ். தலைமையாசிரியர் (பொறுப்பு) திரு. P. டேவிட் சுரேஷ் பாபு. உதவி தலைமையாசிரியர்.திரு.D. ஜேக்கப் ஜீவானந்தம். ஆசிரியர்கள் உடனிருந்தனர்.

# போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கு: ராய் டிரஸ்ட் நிறுவனர் பேச்சு



திருவாரூர், ஜூலை 1

திருவாரூர் மாவட்டம் குடவாசல் தாலுகா, மஞ்சக்குடி சுவாமி தயானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் போதை பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு முகாமும், புற்று நோய் பற்றிய விழிப்புணர்வும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியினை கல்லூரி நிர்வாகத்தோடு இணைந்து யூத் ரெட்கிராஸ் சொசைட்டி, ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மெடிக்கல் சென்டர், அம்மையப்பன் சிவா மெடிக்கல் லேப் இணைந்து நடத்தினர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிக்காக அம்மையப்பன் சிவாகண் மற்றும் ரத்த பரிசோதனை மையத்தினர், அமெரிக்காவில் புகழ்பெற்ற தெற்கு அலபாமா பல்கலைகழக பேராசிரியர் மற்றும் மருத்துவ மாணவர்களை இந்தியாவிற்கு வரவழைத்து இந்நிகழ்வில் கலந்து கொள்ள செய்திருந்தனர்.

முன்னதாக அக்கல்லூரி பேராசிரியர் மற்றும் திருவாரூர் மாவட்ட யூத் ரெட்கிராஸ் ஒருங்கிணைப்பாளர் ஏழுமலை அனைவரையும் வரவேற்றார்.

கல்லூரியின் தாளாளர் சீனிவாசன் தலைமை ஏற்க, கல்லூரியின் முதல்வர் முனைவர் ஹேமா துவக்க உரை ஆற்றி, அனைத்து சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவு பரிசினை வழங்கினார். தெற்கு அலபாமா பல்கலைக்கழகத்தின் மருத்துவ பேராசிரியர்கள் டாக்டர். பத்மமாலினி துளசிராமன் மற்றும் டாக்டர் நான்சி ஆயர் ஸ்ரைஸ் இருவரும் அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்ததின் நோக்கவுரையை ஆற்றினர். அடுத்ததாக சமூக ஆர்வலரும், ஐக்கிய நாட்டு சபையின் தன்னார்வலரும், ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனத் தலைவருமான முனைவர் துரை ராயப்பன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போதை பொருளின் பயன்பாடு மற்றும் கடத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு என்ற தலைப்பில் விழா சிறப்புரையாற்றினார். அவரின் சிறப்புரையில் சர்வதேச போதை தடுப்பு நாள் ஜூன் 26 அனுசரிக்கபடுகிறது. போதை பழக்கத்தை தடுப்பதிலும், போதைக்கு அடிமையானவர்களை மீட்பதிலும் யோகாவும் தியானமும் பயனளிக்கும் என்றும், ஒரு சிறப்பு மருத்துவரிடம் நேரடியாகவோ, குடும்ப சிகிச்சையோ பெறுவதன்மூலம்போதை பொருள் பழக்கத்திலிருந்து விடுபட முடியும் என்ற அறம் சார்ந்த வாழ்க்கையை மாணவர்களுக்கு வலியுறுத்தி பேசினார். மேலும் கூறுகையில் மனித சமூகத்தைச் சீர்கெடுப்பதில் போதை பொருள் உபயோகம் முதலிடம் வகிக்கிறது. போதைபொருள் பயன்பாடு மனித அறிவை மழுங்கச் செய்து சிந்திக்கும் திறனை அழித்து குடும்பம், சமூகத்தை தவறான பாதையில் இழுத்து சென்று விடும். அநீதிகளும், கொடுமைகளும், அராஜகங்களும், வன்முறையும் நாட்டில் அதிகரித்து கொண்டே இருக்கின்றன. போதைபொருள் கடத்தல், விற்பனை, இன்று மிகப்பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளது. உலகம் முழுவதும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சுமார் 30 கோடிக்கும் மேற்பட்டோர் போதை பொருள்களுக்கு அடிமையாக இருக்கின்றனர் என்று புள்ளி விவரம் தெரிவிக்கிறது. போதை பொருள் பயன்படுத்துபவரில் மூன்றில் ஒருவர் பெண் என்பது வேதனைக்குரிய அதிர்ச்சித் தகவல். போதைக்கு அடிமையானவரில் 85 விழுக்காடு படித்தவர்கள். அதில் 75 விழுக்காடு இளைஞர்கள் ஆவர். மது, சிகரெட் ஆகியவை முதலில் மனித சமுதாயத்தை கெடுத்து, பிறகு அதையும் தாண்டி கஞ்சா, கொக்கைன், பிரவுன் சுகர், ஹெராயின், அபின், புகையிலை, ஒயிட்னர் போன்ற மனிதனை அழிக்கும் போதை பொருள்கள் இளைஞர்களின்வாழ்வை சீரழிக்கிறது. மேலும் புகைப்பவர்களை விட புகைப்பவரின் அருகில் உள்ளவர்கள் அதிகம் பாதிக்க படுகிறார்கள். இவர்கள் மட்டுமின்றி இவர்களின் குடும்பங்கள், இவர்களால் பாதிப்புக்கு உள்ளாகும்.

அப்பாவி பெண்கள், குழந்தைகள் என்று பலருடைய வாழ்வும் சீரழித்து விடுகிறது. தனிமனித ஒழுக்கம் சீர்கெட்டு நாட்டின்முன்னேற்றபாதைக்கு போதை தடையாக இருக்கிறது. உலக வர்த்தகத்தில் பெட்ரோல், இராணுவ தளவாடத்திற்கு அடுத்து சட்டவிரோதமாகபோதை பொருள்கடத்தல் வியாபாரம் கொடி கட்டி பறக்கின்றது. சினிமாவில் போதை பொருள் பயன்பாடுகளுக்கான காட்சிகளை தடை செய்ய வேண்டும் என்று ராய் டிரஸ்ட் நிறுவனத் தலைவர் முனைவர் துரை ராயப்பன் எடுத்துரைத்தார்.

திருவாரூர் மெடிக்கல் சென்டர் புற்று நோயியல் மருத்துவர் பிச்சையம்மாள் புற்று நோய்சம்பந்தமானவிழிப்புணர்வையும், புற்று நோய் ஏன் ஏற்படுகிறது, நோயின் வகைகள், தடுக்கும் வகைகள், அதற்கான தீர்வு பற்றி மாணவர்களுக்கும், கல்லூரி ஊழியர்கள் உட்பட அனைவருக்கும் எடுத்துரைத்தார்.

சிவா மருத்துவ பரிசோதனை நிலையத்தை சேர்ந்த டாக்டர். அகிலா சிறுநீர் தொற்று பற்றிய விழிப்புணர்வை 250 மாணவிகளுக்கு எடுத்துரைத்தார்.

குடவாசல் ரெட் கிராஸ் சொசைட்டி தலைவர் அசோகன், திருவாரூர் மெடிக்கல் சென்டர் மக்கள் தொடர்பு அதிகாரி செல்வ கணபதி, மருத்துவர் மோனிஷா, சிவா கிளினிக்கல் லேப்பை சேர்ந்த பாலசுந்தரம், சிவசங்கர் (ஆப்டோமெட்ரிஸ்ட்), டாக்டர்.அகிலா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிவா கிளினிக்கை சேர்ந்த விஷ்ணுப்பிரியா, கலைச்செல்வி, ஜோஸ்பின் மேரி, பரணி, சண்முகப் பிரியா உள்பட 800க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர், கல்லூரி ஊழியர்கள், உதவி பேராசிரியர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள். இறுதியாக கல்லூரி நிர்வாகத்தினர் அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

# புளியந்தோப்பு அடுக்குமாடி குடியிருப்பில் லிப்ட் பிரச்சனையால் பறிபோன உயிர்.. அண்ணாமலை கண்டனம்

சென்னை, ஜூலை 1

சென்னை புளியந்தோப்பு கேபி பார்க் அடுக்குமாடி குடியிருப்பில் லிப்ட் கோளாறால் முதியவர் உயிரிழந்த சம்பவத்திற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, இந்த தரமற்ற குடியிருப்புகளைக் கட்டிய பிஎஸ்டி நிறுவனம் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று குற்றம்சாட்டி உள்ளார்.

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: "சென்னை புளியந்தோப்பு KP பார்க் அடுக்குமாடி குடியிருப்பில், லிப்ட்கோளாறு காரணமாக, 7 ஆவது மாடியில் இருந்து தவறி விழுந்து, கணேசன் என்ற 52 வயது மதிக்கத்தக்க நபர் உயிரிழந்திருக்கிறார் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது. அவரது குடும்பத்தினருக்கு, ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்காகக் கட்டப்பட்ட இந்த KP பார்க் அடுக்குமாடி குடியிருப்பு, தரமற்ற முறையில் கட்டப்பட்ட விவரங்கள், ஐஐடி ஆய்வுக் குழு அறிக்கையின் மூலம் தெரிய வந்தது. இதனை அடுத்து, இந்தக் குடியிருப்பைக் கட்டிய பிஎஸ்டி எஞ்சினியரிங் நிறுவனம், அரசுப் பணிகளில் பங்கேற்க முடியாதவாறு, கருப்புப் பட்டியலில் வைக்கப்படும் என்று திமுக அரசு கூறியது. தரமற்ற குடியிருப்புகளைக் கட்டிய பிஎஸ்டி நிறுவனம் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆனால் கடந்த ஆண்டு, சென்னை நந்தம்பாக்கத்தில், ₹250 கோடி மதிப்பிலான நிதிநுட்ப நகரம் அமைக்க, மீண்டும் இதே பிஎஸ்டி நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கியது திமுக அரசு. இது குறித்து, கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் 19 அன்று கேள்வி எழுப்பியிருந்தோம். அதற்குப் பதிலளித்த திமுக அரசு, முறையான டெண்டர் வழியே தான், அந்த நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது என்று பதிலளித்தது. கருப்புப் பட்டியலில் வைக்கப்பட்ட நிறுவனம் எப்படி அரசு ஒப்பந்தத்தில் பங்கேற்றது என்ற கேள்விக்கு இது வரை பதில் இல்லை.

தற்போது, லிப்ட் கோளாறு காரணமாக ஒரு உயிர் பறிபோயிருக்கிறது. ஐஐடி ஆய்வறிக்கையின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல், தரக்குறைவான கட்டிடங்கள் கட்டும் நிறுவனத்துக்கே மீண்டும் மீண்டும் அரசுப் பணிகள் வழங்கி வரும் திமுக அரசே இதற்கு முழு பொறுப்பு.

ஏழை எளிய மக்களின் உயிர் என்றால் திமுகவுக்கு அத்தனை இளக்காரமாகி விட்டதா? உடனடியாக, இந்தக் குடியிருப்பில் வசிக்கும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், தரமற்ற கட்டிடங்கள் கட்டி வரும் பிஎஸ்டி நிறுவனம் மீதும், மீண்டும் மீண்டும் அரசுப் பணிகளை இந்தநிறுவனத்துக்கு வழங்கி வரும் அனைவரின் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்" இவ்வாறு பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

# மாணவர்களுக்கு அரசு வழங்கிய தரமில்லாத சைக்கிள்களைத் திரும்பப் பெற்று தரமானவைகளை வழங்க வேண்டும் : ப.சிதம்பரம்



சென்னை, ஜூலை 1

முன்னாள் மத்திய மந்திரி ப.சிதம்பரம் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் மாணவர்களுக்கு அரசு வழங்கிய இலவச சைக்கிள்களின் தரக்குறைவு குறித்து மாணவர்களும் ஆசிரியர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த தரமில்லாத சைக்கிள்களை வேறு வழியில்லாமல் விற்க வேண்டிய கட்டாயம் மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று அறிந்து அதிர்ச்சியடைந்தேன்.

சைக்கிள்களை தயாரித்துஅளித்தநிறுவனங்கள் எவை? 34 நிறுவனங்களுக்கு மேல் இருக்க முடியாதே. இந்தத் தரமில்லாத சைக்கிள்களைத் திரும்பப் பெற்று அவற்றுக்கு மாற்றாக தரமான சைக்கிள்களை அந்த நிறுவனங்கள் தர வேண்டும் என்று சட்டப்படியான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
1.7.2024

## கமலுக்கும், எனக்கும் ஒரு அசத்தலான காட்சி இருக்கு... 'இந்தியன் 3' பற்றி நடிகர் எஸ்.ஜே சூர்யா



'இந்தியன் 2' படத்தை 28 ஆண்டுகளுக்கு பிறகு இயக்குனர் சங்கர் இயக்கி வருகிறார். இந்த படத்தில் கமல் ஹாசன், பிரியா பவானி சங்கர், காஜல் அகர்வால், ரகுல் பிரீத் சிங், சித்தார்த், பாபி சிம்ஹா, சமுத்திரக்கனி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். லைகா மற்றும் ரெட் ஜெயன்ட் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள இந்த படத்துக்கு அனிருத் இசையமைத்துள்ளார்.

இந்த நிலையில் 'இந்தியன் 2' படத்தின் டிரெய்லர் கடந்த 25ந் தேதி வெளியாகி ரசிகர்களின் மத்தியில் பெரிய வரவேற்பை பெற்றது. தற்போது இந்த படத்தின் புரமோசனுக்காக 'இந்தியன் 2' படக்குழுவினர் மலேசியா சென்றுள்ளனர்.

இந்தநிலையில், மலேசியாவில் நடைபெற்று வரும் புரமோசன் நிகழ்ச்சியில் நடிகர் எஸ்.ஜே.சூர்யா ஒரு விறுவிறுப்பான தகவல் வெளியிட்டுள்ளார். அது சமூக வலைத்தளத்தில் பரவி வைரலாகி வருகிறது. அதில் 'இந்தியன் 2' படத்தில் சில காட்சிகளில் மட்டுமே நான் நடித்து இருக்கிறேன்.

அதே சமயம் இந்தியன்3 படத்தில், எனக்கும் கமலுக்கும் ஒரு சூப்பர் காம்பினேஷன் காட்சிகள் உள்ளன. அதில் ஒரு காட்சியில் 'சொடக்கு போட்டு, என்னைப் பார்த்து இங்கே வாடா என்று கூப்பிடுவார்'. அந்த அசத்தலான காட்சியை பார்க்க ரசிகர்களாகிய நீங்கள் 'இந்தியன் 3' படத்திற்காக காத்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இந்தியன் படத்தின் 2ம் மற்றும் 3 ம் பாகத்திற்கான படப்பிடிப்பை ஷங்கர் இயக்கி முடித்துள்ளார். இரண்டாம் பாகம் வெளியான அடுத்த சில மாதங்களில் 3 ம் பாகத்திற்காக அப்டேட் வெளியாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## 'டாணாக்காரன்' பட டைரக்டருடன் இணையும் நடிகர் கார்த்தி





கோலிவுட்டில் முன்னணி நடிகராக வலம் வருபவர் நடிகர் கார்த்தி. காதல், கமர்ஷியல், ஆக்சன் மற்றும் வரலாற்று சிறப்பு வாய்ந்த திரைப்படங்களில் கார்த்தி நடித்திருக்கிறார். பொன்னியின் செல்வன், விருமன், சர்தார் ஆகிய திரைப்படங்களின் வெற்றிக்கு பிறகு தனது 25 வது படமான ஜப்பான் திரைப்படத்தில் நடித்தார். இத்திரைப்படம் கடந்த ஆண்டு திரையரங்குகளில் வெளியானது. ராஜூமுருகன் படத்தை இயக்கியிருந்தார். இப்படம் அதிகளவில் வரவேற்பை பெறவில்லை.

கார்த்தி நடிக்கும் 26வது திரைப்படம் வா வாத்தியார். இத்திரைப்படத்தை நலன் குமாரசாமி இயக்குகிறார். அதேபோல, கார்த்தியின் 27 வது படத்தை '96'படத்தை இயக்கிய பிரேம் குமார் இயக்கி இருக்கிறார். மெய்யழகன் என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ள இப்படத்தை சூர்யாவின் 2D என்டர்டெயின்மென்ட் நிறுவனம் தயாரிக்கிறது. படத்தில் அரவிந்த் சாமி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். கோவிந்த் வசந்தா இசை அமைக்கிறார். விரைவில் இரண்டு திரைப்படங்களும் திரைக்கு வரவுள்ளன.

இதைத் தொடர்ந்து டாணாக்காரன் படத்தை இயக்கி புகழ் பெற்ற இயக்குநரும், நடிகருமான தமிழ் இயக்கத்தில் கார்த்தி நடிக்க இருக்கிறார். இப்படத்தை 2டி நிறுவனம் தயாரிக்க உள்ளது. 1960களில் நடக்கும் கேங்ஸ்டர் கதையை மையப்படுத்தி இத்திரைப்படம் உருவாகிறது. இந்நிலையில், இத்திரைப்படத்தின் படப்பிடிப்பு அக்டோபர் மாதம் தொடங்க உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. அதற்கான பணிகள் ஏற்கனவே தொடங்கி விட்டதாகவும் கூறப்படுகிறது. மற்ற நடிகர், நடிகைகள் குறித்த தகவல்களுடன் விரைவில் அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆர்யாகவுதம் கார்த்திக் நடிக்கும் 'மிஸ்டர் எக்ஸ்' படத்தின் அப்டேட்




நடிகர்கள் ஆர்யா மற்றும் கவுதம் கார்த்திக் கூட்டணியில் பிரின்ஸ் நிறுவனம் தயாரிப்பில் உருவாகி வரும் படம் 'மிஸ்டர் எக்ஸ்'. விஷ்ணு விஷாலின் எப்.ஐ.ஆர் படத்தை இயக்கிய மனு ஆனந்த் இந்த படத்தை இயக்கி வருகிறார்.

ஆக்சன் திரில்லர் பாணியில் உருவாகி வரும் இந்த படத்தில் ஆர்யா கதாநாயகனாக நடிக்க முதல் முறையாக கவுதம் கார்த்திக் வில்லனாக நடித்துள்ளதாக கூறப்படுகிறது. சரத்குமார், மஞ்சு வாரியார் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள். திபு நிபுணன் தாமஸ் இசையமைக்கும் இந்த படத்துக்கு தன்வீர் மிர் ஒளிப்பதிவு செய்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு உகாண்டா, செர்பியா உள்ளிட்ட நாடுகளில் நடந்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. படத்திற்காக ஆர்யா கடுமையாக உடற்பயிற்சி செய்யும் புகைப்படங்களும் வெளியாகின. ஆர்யாவின் காட்சிகள் ஏற்கனவே படம்பிடிக்கப்பட்ட நிலையில் மீதமுள்ள காட்சிகள் படமாக்கப்பட்டு வந்தன. இடையில் படத்தின் மோஷன் போஸ்டரும் வெளியாகியிருந்தது.

இந்த நிலையில்தான் படத்தின் படப்பிடிப்பு தற்போது முழுவதுமாக முடிவடைந்துள்ளது. கடைசி நாள் சூட்டிங்கில் படக்குழு கேக் வெட்டி கொண்டாடும் புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளது. படத்தைக் குறித்த அடுத்தடுத்த அப்டேட்கள் விரைவில் வெளியாகும் என்று தெரிகிறது.

## "அந்தகாரம்" இயக்குநருடன் கூட்டணி அமைத்த ஹரிஸ் கல்யாண்




தமிழ் திரையுலகில் வளர்ந்து வரும் நடிகர்களில் ஒருவர் ஹரிஸ் கல்யாண். சிந்து சமவெளி படத்தில் அறிமுகமானாலும் பியார் பிரேமா காதல் படத்தில் கதாநாயகனாக நடித்து பிரபலமானவர்தான் நடிகர் ஹரிஷ் கல்யாண்.

கடந்த ஆண்டு, தோனி என்டர்டைன்மெண்ட் நிறுவனத்தின் தயாரிப்பில் எல் ஜி எம் திரைப்படத்தில் நடித்திருந்தார். இதைத் தொடர்ந்து ஹரிஸ் கல்யாண் நடிப்பில் கடந்த ஆண்டு வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்ற திரைப்படம் பார்க்கிங். இப்படத்தில் எம்.எஸ்.பாஸ்கர், இந்துஜா உள்பட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். இத்திரைப்படம் விமர்சனரீதியாகவும் வெற்றி பெற்றது. இது தவிர, டீசல், நூறு கோடி வானவில், உள்ளிட்ட படங்களையும் கைவசம் வைத்துள்ளார்.

அதேசமயம் ஹரிஷ் கல்யாண், லப்பர் பந்து எனும் திரைப்படத்திலும் நடித்து முடித்துள்ளார். பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் இந்த படத்தை தயாரிக்க தமிழரசன் பச்சை முத்து இயக்குகிறார். இந்த படத்தில் ஹரிஷ் கல்யாண் உடன் இணைந்து அட்டகத்தி தினேஷ், சஞ்சனா, சுவாசிகா விஜய், தேவதர்ஷினி மற்றும் பலர் நடித்துள்ளனர். இத்திரைப்படம் விரைவில் திரைக்கு வரவுள்ளது.

இந்நிலையில் ஹரிஸ் கல்யாண் நடிக்கும் அடுத்த படம் தொடர்பான அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. அதன்படி, அந்தகாரம் படத்தை இயக்கி புகழ்பெற்ற விக்னராஜன் இயக்கத்தில் ஹரிஸ் கல்யாண் நடிக்க இருக்கிறார். தி ரூட் மற்றும் பேஷன்பிக்சர்ஸ் நிறுவனம் இப்படத்தை தயாரிக்க உள்ளது. சந்தோஷ் நாராயணன் படத்திற்கு இசை அமைக்கிறார். ஹரிஸின் பிறந்தநாளை முன்னிட்டு போஸ்டர் வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் படத்தின் அடுத்தடுத்த அப்டேட்டுகள் வெளியாக உள்ளன.

## நடிகர் அஜித்தின் 'விடாமுயற்சி' படத்தின் பர்ஸ்ட் லுக் வெளியாகிறது

தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான அஜித், துணிவு படத்தை தொடர்ந்து 'விடாமுயற்சி' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தை தடையறத் தாக்க, மீகாமன், தடம், கலகத் தலைவன் உள்ளிட்ட படங்களை இயக்கிய மகிழ்த்திருமேனி இயக்குகிறார். அனிருத் இசையமைக்கும் இப்படத்தை லைகா நிறுவனம் தயாரிக்கிறது. இந்த படத்தில் அர்ஜுன், திரிஷா, ரெஜினா, சந்தீப் கிஷன் உள்ளிட்டோர் நடித்து வருகின்றனர்.

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் 'விடாமுயற்சி' வெளியாகிறது. 'விடாமுயற்சி' படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு அஜர்பைஜானில் தொடங்கியது. இதன் ஸ்டண்ட் காட்சிகள் எப்படி உருவாகிறது என்ற வீடியோவும் வெளியாகி ரசிகர்களை உற்சாகப்படுத்தியது. இந்த நிலையில், இன்று இரவு 7.03 மணிக்கு 'விடாமுயற்சி' படத்தின் பர்ஸ்ட் லுக் வெளியாக உள்ளது.




## ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப்: இத்தாலியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது சுவிட்சர்லாந்து அணி



17வது ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப் (யூரோ) போட்டி ஜெர்மனியில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 24 அணிகள் 6 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அணியும், தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள், 3வது இடத்தை பெறும் சிறந்த 4 அணிகள் என்று மொத்தம் 16 அணிகள் 'நாக்அவுட்' சுற்றுக்கு தகுதி பெறும். அதன்படி தற்போது இந்த தொடரின் லீக் சுற்று ஆட்டங்கள் கடந்த 27ம் தேதி நிறைவு பெற்றன. தற்போது நாக் அவுட் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இந்த தொடரில் நேற்று நடந்த ஆட்டத்தில் சுவிட்சர்லாந்து இத்தாலி அணிகள் மோதின. ஆட்டத்தின் 37வது நிமிடத்தில் சுவிட்சர்லாந்து ரெமோ ப்ரூலர் கோல் அடித்தார். இதனால் அந்த அணி 10 முன்னிலை பெற்றது. தொடர்ந்து ஆட்டத்தின் 46வது நிமிடத்தில் சுவிட்சர்லாந்து வீரர் ரூபன் வார்க்ஸ் கோல் அடித்தார். இத்தாலி வீரர்கள் கடைசி வரை போராடியும் பதில் கோல் அடிக்கவில்லை. இறுதியில் ஆட்ட நேர முடிவில் 20 என சுவிட்சர்லாந்து வெற்றி பெற்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறியது.

## கோபா அமெரிக்க கால்பந்து தொடர்: பராகுவேவை வீழ்த்தி அபார வெற்றி பெற்ற பிரேசில்



உலகக் கோப்பை, யூரோ கோப்பை கால்பந்து தொடருக்கு அடுத்து புகழ்பெற்ற கோபா அமெரிக்க கால்பந்து தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடர் கடந்த 1916ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்த தொடர் வரும் ஜூலை 15ம் தேதி வரை நடைபெறுகிறது.

இந்நிலையில் இந்த தொடரில் நெவாடாவில் இன்று நடைபெற்ற ஒரு ஆட்டத்தில் பிரேசில் பராகுவே அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய பிரேசில் அணி முதல் பாதியில் 3 கோல்களை அடித்து அசத்தியது. பராகுவே அணி பதிலுக்கு 1 கோல் திருப்பியது.

இதையடுத்து முதல் பாதி ஆட்டத்தில் 31 என்ற கோல் கணக்கில் பிரேசில் அணி முன்னிலை பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற 2வது பாதி ஆட்டத்தில் பிரேசில் அணி மேலும் ஒரு கோல் அடித்தது. இறுதியில் ஆட்ட நேர முடிவில் பிரேசில் அணி 41 என்ற கோல் கணக்கில் பராகுவேவை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

## ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப்: 2வது சுற்று ஆட்டத்தில் சுவிட்சர்லாந்து இத்தாலி அணிகள் மோதல்




17வது ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப் (யூரோ) போட்டி ஜெர்மனியில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 24 அணிகள் 6 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அணியும், தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள், 3வது இடத்தை பெறும் சிறந்த 4 அணிகள் என்று மொத்தம் 16 அணிகள் 'நாக்அவுட்' சுற்றுக்கு தகுதி பெறும்.

அதன்படி தற்போது இந்த தொடரின் லீக் சுற்று ஆட்டங்கள் கடந்த 27ம் தேதி நிறைவு பெற்றன. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடித்த ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஸ்பெயின், இத்தாலி, இங்கிலாந்து, டென்மார்க், ஆஸ்திரியா, பிரான்ஸ், ரோமானியா, பெல்ஜியம், போர்ச்சுகல், துருக்கி ஆகிய 12 அணிகளும், 3வது இடத்தை பெறும் சிறந்த 4 அணிகளான சுலோவேனியா, நெதர்லாந்து, சுலோவாக்கியா, ஜார்ஜியா உள்ளிட்ட 16 அணிகள் 2வது ('நாக்அவுட்') சுற்றுக்கு தகுதி பெற்றன.

இந்நிலையில் இந்த தொடரில் இன்று நடைபெறும் 2வது சுற்று ஆட்டத்தின் முதல் ஆட்டத்தில் சுவிட்சர்லாந்து இத்தாலி அணிகள் ஒலிம்பியாஸ்டேடியன் பெர்லினில் மோத உள்ளன. இந்திய நேரப்படி இந்த ஆட்டம் இரவு 9.30 மணிக்கு தொடங்குகிறது.

## டி20 உலகக்கோப்பையை வென்றபின் மைதானத்தின் மண்ணை சாப்பிட்ட ரோகித்..வீடியோ வைரல்

அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடைபெற்று முடிந்த 9வது டி20 உலகக்கோப்பை தொடரில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது. 17 ஆண்டுகள் கழித்து டி20 உலகக்கோப்பை தொடரில் இந்தியா சாம்பியன்பட்டம் வென்றதை ரசிகர்கள் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர். ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி ஐ.சி.சி. டெஸ்ட் சாம்பியன்ஷிப் மற்றும் 50 ஓவர் உலகக்கோப்பை தொடர்களின் இறுதிப்போட்டி களில் தோல்வியை தழுவியிருந்தது. இதனால் உணர்ச்சி வசப்பட்ட ரோகித், இந்த வெற்றியை நினைவு கூறும் வகையில் பார்படாஸ் மைதானத்தின் மண்ணை சாப்பிட்டார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.



## ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப்: இத்தாலியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது சுவிட்சர்லாந்து அணி



17வது ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப் (யூரோ) போட்டி ஜெர்மனியில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 24 அணிகள் 6 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அணியும், தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள், 3வது இடத்தை பெறும் சிறந்த 4 அணிகள் என்று மொத்தம் 16 அணிகள் 'நாக்அவுட்' சுற்றுக்கு தகுதி பெறும். அதன்படி தற்போது இந்த தொடரின் லீக் சுற்று ஆட்டங்கள் கடந்த 27ம் தேதி நிறைவு பெற்றன. தற்போது நாக் அவுட் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இந்த தொடரில் நேற்று நடந்த ஆட்டத்தில் சுவிட்சர்லாந்து இத்தாலி அணிகள் மோதின. ஆட்டத்தின் 37வது நிமிடத்தில் சுவிட்சர்லாந்து ரெமோ ப்ரூலர் கோல் அடித்தார். இதனால் அந்த அணி 10 முன்னிலை பெற்றது. தொடர்ந்து ஆட்டத்தின் 46வது நிமிடத்தில் சுவிட்சர்லாந்து வீரர் ரூபன் வார்க்ஸ் கோல் அடித்தார். இத்தாலி வீரர்கள் கடைசி வரை போராடியும் பதில் கோல் அடிக்கவில்லை. இறுதியில் ஆட்ட நேர முடிவில் 20 என சுவிட்சர்லாந்து வெற்றி பெற்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறியது.



பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கட் செய்தலிற் றீது

**விளக்கம்:**
பலர்முன்னே பயனில்லாத சொற்களைச் சொல்லுதல், நண்பரிடத்தில் அறம் இல்லா செயல்களைச் செய்தலை விடத் தீமையானதாகும்.

**நமது தினகனி**
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.